**யாழ்ப்பாணம் மாநகர சபை - 2021**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

யாழ்ப்பாணம் மாநகர சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானங்கள் மற்றும் செலவுகள் கணக்கு, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் (252 ஆம் அத்தியாயம்) 219 ஆம் பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எமது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு யாழ்ப்பாண மாநகர சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சலை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையான நியாயமான நிலைமையை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளக கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

மாநகர சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மாநகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுக்ள மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களுக்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

  இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்பவருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கொல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது மாநகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது மாநகர சபையின் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மாநகர சபையின் நிறுவனம் செயற்படுகின்றதா எனவும்,
- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,
- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்ட ரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் மாநகர சபையின் நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்தை ஒத்திருந்தன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் இந்த அறிக்கையின் 1.6.1 ஆம் பந்தியிலுள்ள (அ) அவதானிப்பு நீங்கலாக கடந்த வருடத்தில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் முன்வைக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | முன்னைய ஆண்டுகளில் காணிகள் மற்றும் காணி சீர்திருத்தம் மீதான ஆக்கப் பொருட் செலவினம் செலவு செய்யப்பட்டிருந்த போதும், காணி கட்டடங்களின் பெறுமதிக்குள் உள்ளடக்கப் பட்டிருக்காமையால் நடை முறையல்லாச் சொத்து மற்றும் மூலதன அரசிறை என்பன ரூபா 153,773,505 குறைத்து வெளிப்படுத்தப் பட்டிருந்தது. | மேற்படி எமது சபையின் காணி, மற்றும் கட்டிடங்களின் பெறுமதியினை நிதிக் கூற்றில் உள்ளடக்குவதற்காக, இவற்றின் பெறுமதியை மதிப்பீடு செய்வதற்காக விலை மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது. எனினும் விலை மதிப்பீட்டுத் திணைக் களத்தின், சொத்துக்களின் விலை மதிப்பீட்டு பெறுமதியை இற்றை வரை எம்மால் பெற்றுக் கொள்ள இயலாததனால் பெறுமதியானது முன்னைய மற்றும் தற்போதைய நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப் படவில்லை. | கணக்கீட்டு கொள்கைகளிற்கமைவாக நடவடிக்கைகள் நிறைவுபெற்றமையை உறுதிப்படுத்தி பதிவுகள் மேற்கொள்வதனை உறுதிப்படுத்துவதுடன், குறித்த தவறுகள் சீர்செய்யப்படல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் LDSP நிதி மூலம் மேற்கொள்ளப்பட்ட ரூபா 7,031,213 பெறுமதியான 03 மூலதன அபிவிருத்தி வேலைகள் மூலதனமாக்கப்படாமையினால் நிதிக்கூற்றுக்களில் நடை முறையல்லாச் சொத்துக்கள் மற்றும் மூலதனச் செலவீட்டிற்கான அரசிறை உதவு தொகை என்பன குறைத்து வெளிப்படுத்தப்பட்டிருந்தது. | எமது சபையின் பெயரில் காணப்படும் காணி கட்டிடங்கள் போன்றவை விலை மதிப்பீடுகள் செய்யப்படாமையால் நடை முறையல்லாச் சொத்தில் உள்ளடக்கப்படவில்லை. இத்தவறு திருத்தப்பட்டு மேற்கொள்ளப்பட்ட மூலதன அபிவிருத்தி வேலைகள் 2022 முடிவுக்கணக்குகள் தயாரிக்கும் போது உள்ளடக்கப்படும். | கணக்கீட்டு கொள்கைகளிற்கமைவாக நடவடிக்கைகள் நிறைவுபெற்றமையை உறுதிப்படுத்தி பதிவுகள் மேற்கொள்வதனை உறுதிப்படுத்துவதுடன், குறித்த தவறுகள் சீர்செய்யப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மீளாய்வாண்டில் சபையினால் 08 உருப்படியான பொருட்கள் கொள்வனவு, 18 வாகனத்திருத்த வேலைகள் மற்றும் 78 வேலைத்திட்டங்களானது நிறைவேற்றப்பட்டிராத போதும் கொடுப்பனவு உறுதிச்சீட்டுகள் தயாரிக்கப்பட்டு சில்லறைக்கடன் கொடுநர் கணக்கில் உள்ளடக்கப்பட்டிருந்தமையினால் நிதிக்கூற்றுக்களில் செலவினங்கள் மற்றும் நடப்பு பொறுப்புக்கள் ரூபா 135,021,292 அதிகரித்து வெளிப்படுத்தப்பட்டிருந்தது. | எதிர்வரும் காலங்களில் உரிய நேரத்தில் வேலைகள் நிறைவேற்ற நடடிவக்கைகள் எடுக்கப்படும். | வேலைகள் நிறைவு பெற்ற பின்பே கணக்குகளில் பதிவுகள் மேற்கொள்பட வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டில் 2021 திசெம்பர் 31 ஆம் திகதியில் நீர் வேலைப்பகுதி மற்றும் மின்சாரப்பகுதியின் பொருட்கள் தொடர்பாக காணப்பட்ட இருப்பு ரூபா 2,337,669 நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப் பட்டிருக்காமையினால் நடை முறைச்சொத்து மற்றும் வருமான மிகை என்பன குறைத்து வெளிப்படுத்தப் பட்டிருந்தது. | இதுவரைகாலமும் வாக்குத் தலைப்பின் கீழ் கோரிக்கை கோரப்பட்டு பொருட்களுக்கான தொகை நடப்பாண்டிலேயே முழுமையாக செலவு செய்யப்பட்டு வந்துள்ளது. தற்போது 01.09.2022 முதல் முற்பணக்கணக்கு முறையில் பொருட்கள் பெறப்பட்டு வருட இறுதியில் உரிய முறையில் கணக்குக்கு சேர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | கணக்கீட்டு கொள்கைகளிற்கமைவாக உரிய காலப்பகுதியில் வெளிப்படுத்தல்கள் மேற்கொள்வதனை உறுதிப்படுத்துவதனூடாக குறித்த பெறுமதிகளினை நடைமுறையல்லாச் சொத்தாக்கல் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (உ) | 2020 ஆம் ஆண்டு சபைநிதி மூலம் கொள்வனவு செய்யப்பட்ட 1378 எண்ணிக்கையான நூலகப் புத்தகங்களும் மற்றும் மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட 647 எண்ணிக்கையான நூலகப் புத்தகங்களும் சொத்தாக்கம் செய்யப்பட்டிருக்காமையினால் நிதிக்கூற்றுக்களில் ரூபா 1,041,890 நிலையான சொத்து மற்றும் மூலதன அரசிறை உதவு தொகை என்பன குறைத்து வெளிப்படுத்தப்பட்டிருந்தது. | சபை நிதி மூலம் கொள்வனவு செய்யப்பட்ட 1378, 647 எண்ணிக்கையான நூலகப் புத்தகங்களும் சொத்தாக்கம் செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | கணக்கீட்டு கொள்கைகளிற்கமைவாக உரிய காலப்பகுதியில் வெளிப்படுத்தல்கள் மேற்கொள்வதனை உறுதிப்படுத்துவதனூடாக குறித்த பெறுமதிகளினை நடைமுறையல்லாச் சொத்தாக்கல் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். |

### 1.6.2 கணக்காய்விற்காக எழுத்துமூலச் சான்றுகள் இல்லாமை

| விடயம் | தொகை ரூபா | வழங்கப்படாத கணக்காய்வுச் சான்று | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|---|---|
| ஆதனவரி ஆரம்ப நிலுவை | 116,183,594 | காலப்பகுதியினை உறுதிப்படுத்தாமை | சபையினால் பராமரிக்கப்படும் மென்பொருளில் நிலுவைகளை பிரித்து அறிய முடியாதுள்ளது. எதிர் காலத்தில் அதனை அபிவிருத்தி செய்து வெளிப்படுத்தப்படும். | குறித்த பெறுமதி எந்த ஆண்டுகளுக்குரியது என்பது வெளிப்படுத்தப்பட வேண்டும் |

## 1.7 இணக்கமின்மைகள்

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்கு விதி | | | |
| - நிதி ஒழுங்கு விதி 571 | சபையினால் 02 வருடங்களிற்கு மேற்பட்ட ரூபா 22,339,964 பெறுமதியான வைப்புக்கள் தொடர்பில் இற்றைவரை தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | பல்லின வைப்புக்களில் ரூபா 66,461 மீளளிப்புச் செய்யப்பட்டுள்ளது. மிகுதி சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது | நிதி ஒழுங்கு விதிகளின் ஏற்பாடுகளிற்கமைவாக குறித்த வைப்புக்கள் தொடர்பில் உரிய நடவடிக்கைகள் விரைவாக மேற்கொள்ளப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 272,824,761 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 160,217,539 ஆகும்.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| (அ) **வீதவரி** | | |
| சபையின் எல்லைக்குட்பட்ட 40346 எண்ணிக்கையான ஆதனங்களின் பெறுமதிகள் ஆதன அறவீட்டிற்காக 2010 ஆம் ஆண்டிற்கு பின்னர் மீள்மதிப்பீடு செய்யப்படாதிருந்த மையினால் சபைக்குரிய ஆதன வரி | ஆதன மீள்மதிப்பீடு தொடர்பாக முதல்வர் பிரதம விலை மதிப்பீட்டாளருடன் நேரடியாக தொடர்பு கொண்ட போது ஆளனி பற்றாக்குறை காணப்படுவதனாலும், கூடிய எண்ணிக்கையான ஆதனங்களை கொண்ட சபையாகக் காணப்படுவதனாலும் உடனடியாக மீள் மதிப்பீடு செய்ய முடியாதுள்ளது. | வருமான சேகரிப்பு முகாமைத்துவத்தினை வினைத்திறனாக்குவதுடன் நிலுவைகளை விரைவாக அறவிடுவதற்குரிய ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன் குறித்த நிலுவை தொடர்பில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை |

| | | |
|---|---|---|
| வருமானம் இழப்பு ஏற்பட்டுள்ளது. அத்துடன் மாநகர சபையின் அதிகாரத்திற் குட்பட்ட இடங்களிலுள்ள காணிகள் மற்றும் நிர்மாணிக்கப்பட்ட வீடுகள், கட்டடங்கள் என்பனவற்றின் மீது அறவிடப்பட வேண்டிய ரூபா 140,874,328 ஆதனவரி நிலுவையினை அறவிடுவதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டிருந்தது. | ஆதன உரிமையாளர்களில் பெரும்பாலானோர் வெளிமாவட்டங்களில், வெளிநாடுகளில் வசிப்பதனாலும், வெற்று நிலங்களுக்கான ஆதன உரிமையாளர்களை இனங்காண முடியாதுள்ளது | விரைவுபடுத்தல் வேண்டும். |

(ஆ) **வாடகை**

| | | |
|---|---|---|
| ரூபா 7,201,257 குத்தகை நிலுவையானது 05 வருடங்களிற்கு மேற்பட்ட காலமாக அறவிடப்படாதுள்ளது. | குத்தகை நிலுவை அறவீடு செய்வதற்கு சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | குறித்த நிலுவை தொடர்பில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை விரைவுபடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

மாநகர சபைக் கட்டளை சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் பொது சுகாதாரம், பொதுப் பாவனைச் சேவைகள், பொது வீதி தொடர்பான விடயங்கள் முறைமைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல், பொதுமக்களின் நல்வாழ்வு, வசதிகளும் நலன்புரியும் ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செயற்பாடுகளை நிறைவேற்றவது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

### 3.1 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | மாநகரசபை துணைவிதி அத்தியாயம் 4 பிரிவு ஐ இன் பிரகாரம் சபையின் எல்லைக்குள் பொருத்தப்பட்ட விளம்பர பலகைகளிற்கு வழங்கப்படும் உரிமங்களிற்கு கட்டணம் அறவிடப்பட வேண்டியிருந்தும் நிர்மாணிக்கப்பட்டிருந்த 15 எண்ணிக்கையான விளம்பரப்பலகைகளிற்கு கட்டணம் அறவிடப்படாமை 2022 மார்ச் 15 ஆம் திகதிய கள ஆய்வின்போது அவதானிக்கப்பட்டது. இதனால் 2021 ஆம் ஆண்டிற்கான வருமானத்தில் ரூபா 1,229,160 இழப்பு ஏற்பட்டிருந்தது. | தங்களால் குறிப்பிடப்பட்ட அறவிடப்படாத விளம்பரக்கட்டணத்தில். 2021 இலேயே குறித்த விளம்பரதாரர்களிற்கு first notice , second Noticce அனுப்பப்பட்டுள்ளது. அதில் 596,925.00 அறவிடப்பட்டுள்ளது. மிகுதி அறவிடுவதற்கும் தொடர் நடவடிக்கைக்காகவும் வருமான மேற்பார்வையாளர்களிற்கு விபரம் வழங்கப்பட்டுள்ளது. | குறித்த சட்ட ஏற்பாடுகளிற்கமைவாக ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ஆ) | சபையினால் வருடாந்தம் கேள்விகோரி வழங்கப்படும் சந்தைகள் கடைகளானது மீளாய்வாண்டு காலப்பகுதியில் கேள்விகோரி வழங்கப்பட்டிருக்காமையினால் வருடாந்தம் ரூபா 5,076,019 சபைக்கு வருமான இழப்பாக இருந்தது. | குறித்த விடயம் தொடர்ச்சியான கேள்வி நடைமுறைகளை பின்பற்றியிருந்தும் சந்தைகள் இறைச்சிக்கடைகளை குத்தகைக்கு பெற்றுக்கொள்ள எவரும் முன்வராததால் சபைக்கு வருமான இழப்பு ஏற்பட்டுள்ளது. | சபையின் சொத்துக்களினைப் பயன்படுத்தி வருமானங்களினை உழைப்பதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் 07 வாகனங்கள் 02 வருடங்களிற்கு மேற்பட்ட காலப்பகுதியில் திருத்தப்பட முடியாத வகுதிக்குள் வாகனப்பகுதியால் உள்வாங்கப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பான அனுமதியானது இயந்திரப்பொறியியலாளரிடமிருந்து பெறப்பட்டிருக்காமை கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்டிருந்தது. | இவ் ஐயவினாவிற்கான பதில் எமது சம இலக்க 25.07.2022 ஆம் திகதிய கடிதமூலம் ஏற்கனவே தங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. | சுற்றுநிருப ஏற்பாடுகளிற்கமைவாக ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் விரைவாக மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ஆ) | மாநகர சபையானது கடந்த ஐந்து வருடங்களிற்கு மேல் தீர்வு செய்யாத ரூபா 5,358,866 முற்பணங்கள் தொடர்டபான ஆவணங்கள் அழிவடைந்த போதும் அவை தொடர்பில் ஆக்கபூர்வமான நடவடிக்கை மேற்கொள்ளப்படாமல் தொடர்ந்தும் நிதிநிலவரக்கூற்றில் சொத்தாக வெளிப்படுத்தப்பட்டு வருகின்றமையினால் சொத்துக்களின் பெறுமதி அதிகரித்து வெளிப்படுத்தப்பட்டிருந்தது. | சபையின் 05 வருடத்திற்கு மேல் தீர்வுசெய்யாத முற்பணங்கள் ரூபா 5,358,866 இனை சீர் செய்தல் தொடர்பான அனுமதிக்காக கௌரவ ஆளுநர் அவர்களிற்கு 2021.11.11 ஆம் திகதி கடிதம் அனுப்பி வைக்கப்பட்டது. ஆளுநரினால் 06.08.2022 ஆம் திகதிய கடிதமூலம் சில குறைபாடுகள் குறிப்பிடப்பட்டு சில ஆவணங்கள் கோரப்பட்டுள்ளன. அது தொடர்பான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | இவ் விடயம் தொடர்பில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் விரைவாக மேற்க்கொள்ளப்படல் வேண்டும். |

## 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | **பொறுப்பேற்கப்படாத சொத்துக்கள்** | | |
| | சபைக்குச் சொந்தமான 51 காணி கட்டிடங்கள் மதிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | பதில் தரப்படவில்லை. | சபைக்கு சொந்தமான சொத்துக்களின் பெறுமதிகளினை மதிப்பீடு செய்து நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்குவதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ஆ) | சபையினால் 45 எண்ணிக்கையான காணிகள் சபையின் பெயரிற்கு உரிமை மாற்றப்பட்டிருக்கவில்லை. | பதில் தரப்படவில்லை. | காணிகளின் பெறுமதிகள் சபையின் பெயருக்கு மாற்ற நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். |

## 3.4 மனித வளங்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|
| **ஊழியர் கடன்கள்** | | |
| சபையினால் பணிநீக்கம் செய்யப்பட்ட, சம்பளம் நிறுத்தி வைக்கப்பட்ட மற்றும் ஓய்வு பெற்ற 154 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ஊழியர் கடன் நிலுவை ரூபா 933,643 இடர்கடன், விழா முற்பணம் மற்றும் விசேட முற்பணம் ஆகியனவற்றினை 02 வருடங்களிற்கு மேலாக அறவீடு செய்வதற்கு சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த நடவடிக்கைகள் தொடர்பாக உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | கடன் நிலுவையினை உரிய காலத்தில் பெற்றுக்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். |